**தலைப்பு 212 – பரீட்சைகள் திணைக்களம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 ஆம் ஆண்டு**

---

தலைப்பு 212 பரீட்சைகள் திணைக்களத்தின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக் கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு வருமானக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2016 ஆகஸ்ட் 14 ஆம் திகதி பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்திற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல் என்பனவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள் மற்றும் காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக் கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

1.2 **கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்**

---

ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய சட்டரீதியான ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிருவாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

2. **கணக்குகள்**

2.1 **ஒதுக்கீட்டுக் கணக்கு**

**மொத்த நிதியேற்பாடும் செலவினமும்**

திணைக்களத்திற்காக வழங்கப்பட்ட மொத்த தேறிய நிதியேற்பாடு ரூபா 3,260.65 மில்லியன் ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டு இறுதியளவில் அதில் ரூபா 3,181.22 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் திணைக்களத்திற்கு ஒதுக்கப்பட்ட மொத்தத் தேறிய நிதியேற்பாட்டில் ரூபா 79.43 மில்லியன் அதாவது 2.44 சதவீத நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| செலவினம் | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | தேறிய நிதி ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா.மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | |
| மீண்டுவருபவை | 2,925.51 | 2,894.20 | 31.31 | 1.07 |
| மூலதனம் | 335.14 | 287.02 | 48.12 | 14.36 |
| மொத்தம் | **3,260.65** | **3,181.22** | **79.43** | **2.44** |

**2.2 வருமானக் கணக்கு**

**மதிப்பிடப்பட்ட மற்றும் உள்ளவாறான வருமானம்**

திணைக்களத்தினால் 2016 ஆண்டிற்காக 20.03.02.13 ஆம் இலக்க வருமானக் குறியீட்டிற்காக கூட்டுத்தொகை ரூபா 300.00 மில்லியன் வருமானம் மதிப்பிடப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டின் போது ரூபா 392.16 மில்லியன் வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. அவை மதிப்பீட்டு வருமானத்தில் 130.72 சதவீதமாகும். விபரங்கள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| வருமானக் குறியீடு | 2016 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு | | | மதிப்பீட்டு வருமானத்தின் சதவீதமாக மிகை |
|---|---|---|---|---|
| | மதிப்பீட்டு வருமானம் | உள்ளபடியான வருமானம் | மிகைத்தல் | |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| 20.03.02.13 | 300.00 | 392.16 | 92.16 | 30.72 |

**2.3. அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு**

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகள்**

திணைக்களத்திற்குரிய 21201 ஆம் விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியாகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ளபடி யானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடி யானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடி யானது |
| ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் |
| 23.01 | 23.00 | 15.00 | 19.28 | 100.00 | 65.29 |

2.4 **பொது வைப்புக் கணக்கு**

திணைக்களத்தின் கீழ் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 03 பொது வைப்புக் கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 1.34 மில்லியனாக இருந்தது. விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| வைப்புக் கணக்குகளின் இலக்கம் | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|
| | ரூபா மில்லியன் |
| 6000/0000/00/0002/0105/000 | 0.28 |
| 6000/0000/00/0016/0053/000 | 0.87 |
| 6000/0000/00/0018/0115/000 | 0.19 |
| மொத்தம் | 1.34 |

### 2.5 கணக்காய்வு அவதானிப்பு

பரீட்சைகள் திணைக்களத்தின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மேற்கூறப்பட்ட 1.1 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டதன் பிரகாரம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்களின் கீழ் திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தது. அந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்களில் பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

## 3. பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 3.1 பதிவேடுகள் மற்றும் ஏடுகள் பேணப்படாமை

திணைக்களத்தினால் நிதிப்பிரமாணம் 110 இன் பிரகாரம் சேதங்கள் தொடர்பான பதிவேடு நாளதுவரையாக்கப்பட்டு பேணப்பட்டிருக்கவில்லை.

### 3.2 வருமானக் கணக்கு

20.03.02.13 ஆம் இலக்க வருமானக் குறியீட்டிற்குரிய நிதிப் பிரமாணம் 128(2)(ஆ) பிரகாரம் நிலுவை வருமான அறிக்கை அரையாண்டிற்கு ஒரு முறை தயாரிக்கப்பட்டு அடுத்துவரும் மாதத்திற்குள் அரச நிதிக்கொள்கை திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு பிரதியுடன் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.3 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

விடய இலக்கம் 21201 கொண்ட அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு மீதான 2016 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு இணக்கக் கூற்று தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின் போது அத்திகதியில் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாக இருந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 982,030 ஆக காணப்பட்டதுடன் 3 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக இருந்து வந்த போதிலும் அந்நிலுவை மீதிகளை அறவிடுவதற்கு திணைக்களம் தவறியிருந்தது.

### 3.4 இணக்கமின்மைகள்

தெரிவு கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாண ஏற்பாடுகளுக்கு இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டு கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் தொடர்பு | | பெறுமதி | இணக்கமின்மை |
|---|---|---|---|
| | | ரூபா. | |
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | |
| | (i) நிதிப் பிரமாணம் 104 | 145,254 | விபத்திற்குட்பட்ட 02 வாகனங்கள் தொடர்பாக ஆரம்ப பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| | (ii) நிதிப் பிரமாணம் 396(இ) | 733,413 | வழங்கப்பட்டிருந்த போதிலும் வங்கிக்கு சமர்ப்பிக்கப்படாத 06 மாதம் காலம் கடந்த 314 காசோலைகள் தொடர்பாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. |
| (ஆ) | அரச பெறுகை வழிகாட்டல் கோவை | | |
| | 5.4.12 வழிகாட்டல் | 45,581,355 | 2016 ஆம் ஆண்டின் போது திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டிருந்த வழங்கலுக்காக பெறுமதி சேர் வரி கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. அவ்வரி தொடர்பான மாதாந்த அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு பிரதியுடன் உள்நாட்டு இறைவரி ஆணையாளருக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

## 3.5 முகாமைத்துவ பலவீனங்கள்

தெரிவு கணக்காய்வு பரிசோதனையின் போது பின்வரும் பலவீனங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2016 ஆம் ஆண்டு மற்றும் அதன் பின்னர் நடைபெறும் க.பொ.த(சா.தர) பரீட்சைக்காக வினாப்பத்திர அமைப்பு மற்றும் மாதிரி வினாக்கள் தயாரிக்கும் போது பாளி, பிரெஞ்சு, யப்பான் மற்றும் அரபு ஆகிய பாடங்களுக்காக ஒவ்வொரு பாடம் தொடர்பான விஷேடத்துவ நிபுணர்களின் அறிவினைப் பெற்றுக் கொள்வதற்காக செயலமர்வுகள் நடாத்தப்படாமல் வினாப்பத்திரங்கள் தயாரிக்கப்பட்டிருந்தன.

(ஆ) மாதிரி வினாக்கள் தொடர்பாக 6,148 சிங்களம் மற்றும் தமிழ் மொழி மூல பிரதிகளை 98 வலயப் பணிப்பாளர்கள் ஊடாக 6,148 பாடசாலைகளுக்கு விநியோகிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் அப்புத்தகங்களைப் பெற்றுக் கொண்டதாக 27 வலயங்களுக்குரிய 1996 பாடசாலைகளின் அதிபர்களால் உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) திணைக்களத்தினால் நடாத்தப்படுகின்ற நிறுவன பரீட்சைகளுக்காக வினாப்பத்திரங்கள் மற்றும் விடைகளை எழுதும் தாள்களை தபால் அலுவலகங்கள் மூலம் பரீட்சைம ண்டப மேற்பார்வையாளர்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டிருந்ததுடன் பௌதீக ரீதியாக செய்யப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் கண்டறியப்பட்டன.

(i) பரீட்சை ஒழுங்குபடுத்தல், நடாத்துதல் மற்றும் எழுதுகருவிகளை தபாலில் அனுப்புதல், போன்ற வேலைகளுக்கு இடையே உரிய கூட்டிணைப்பை மேற்கொள்ளப்படாமல் நடவடிக்கை எடுக்கப்பட்டமையால் ஒத்தி வைக்கப்பட்ட பரீட்சைகளுக்காகவும் எழுதுகருவிகள் தபாலில் இடப்பட்டிருந்தன.

(ii) களஞ்சியத்திற்கு மீள கிடைக்கப்பெறும் நிறுவன பரீட்சைகளுக்காக பயன்படுத்தப்பட்டு எஞ்சிய பரீட்சை எழுதுகருவிகள் பதிவேடுகளுக்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 3.6 மனித வள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2016 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரிக் கப்பட்ட பதவியணி யினர் | உள்ளபடியான பதவியணி யினர் | வெற்றிடங் களின் எண்ணிக ்கை | மிகைகளின் எண்ணிக் கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 85 | 64 | 21 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 18 | 10 | 08 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 415 | 325 | 90 | - |
| (iv) | ஆரம்ப நிலை | 164 | 156 | 08 | - |
| (v) | ஏனைய(அமைய/ தற்காலிக/ ஒப்பந்த அடிப்படை) | - | 28 | - | 28 |
| | **மொத்தம்** | **682** | **583** | **127** | **28** |